
தரம் 09

# தமிழ் மொழியும் இலக்கியமும்

அலகு 01

## நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுங்கள்

# தமிழ் மொழியும் இலக்கியமும்





Mr. A.L. Sabry B.A., P.G.D.E. (SLTS)
BT / BC/ Al – Hira Maha Vidyalaya, Kattankudy.

# நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுங்கள்

- கட்டுரையாசிரியர்: டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி
- கட்டுரை இடம்பெற்ற நூல்: "நெஞ்சே அஞ்சாதே நீ"

நல்ல எண்ணங்கள்

வெற்றி



கீழ் மட்ட எண்ணங்கள்

துன்பம்

**எந்தவொரு விடயத்தையும் நல்ல முறையில் எடுத்துக் கொள்ள வேண்டும்.**

## <u>பின்வரும் வினாக்களுக்கு சுருக்கமான விடை எழுதுக.</u>

01. நல்லெண்ணங்களைத் தேர்ந்தெடுங்கள் எனும் கட்டுரையை எழுதியவர் யார்?

**<u>டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி</u>**

02. தாழ்த்தும் உணர்ச்சிகளாகக் குறிப்பிடப்படுபவை எவை?

**<u>பயம், கோபம், பொறாமை, குற்ற உணர்வு, கவலை</u>**

03. "கனியிருப்பக் காய் கவர்ந்தற்று" எனும் கருத்தைக் கூறிய இலக்கியம் எது?

**<u>திருக்குறள்</u>**

04. ஒரு சம்பவத்தின் நன்மை, தீமை என்பன எதில் தங்கியுள்ளது?

**<u>அவ்விடயத்தை நாம் எடுத்துக் கொள்ளும் விதத்தில் தங்கியுள்ளது.</u>**

05. எத்தகைய மனம் செயலற்றுப் போகும்?

**<u>முடக்கப்பட்ட மனம் செயலற்றுப் போகும்.</u>**

# பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

**1. சமாளிக்க முடியாத அவலம் - இங்கு அவலம் என்பது**

1) துன்பம் 2) ஆபத்து 3) வறுமை 4) சங்கடம்

**2. ஊசிப்போன உணவுகளை மென்று விழுங்குவார்கள் - இங்கு ஊசிப்போன என்பது**

1) பழுதடைந்த 2) போசாக்கான 3) தரமான 4) வேகவைத்த

**3. சோர்வை உண்டுபண்ணும் எண்ணங்கள் - சோர்வு என்பதன் எதிர்க்கருத்து**

1) சோம்பல் 2) ஆர்வம் 3) உற்சாகம் 4) வருத்தம்

**4. அவன் கையாலாகாதவனாக இருந்தான். – கையாலாகாதவன் என்பது**

1) திறமையானவன் 2) எதையும் செய்யக்கூடியவன்

3) பலமற்றவன் 4) எதையும் செய்ய இயலாதவன்

**5. வாயிற் கதவை சாத்தி விடுகின்றன. - இங்கு சாத்துதல் என்பது குறிப்பது**

1) திறத்தல் 2) மூடுதல் 3) சாய்த்தல் 4) இழுத்தல்

6. **“கனியிருப்பக் காய் கவர்தல்” என்பது உணர்த்தும் கருத்து**
1) பழத்தை விடுத்துக் காயைப் பறித்தல்
2) காயை விரும்பி உண்ணுதல்
3) நல்லதை விடுத்துத் தீயதைத் தேர்ந்தெடுத்தல்
4) நல்லதைத் தேர்ந்தெடுத்தல்

7. **பரீட்சை முறைக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? யோக்கியதை என்பது**
1) ஆர்வம் 2) ஆற்றல் 3) அருகதை 4) திறமை

8. **மனிதர்களுக்கு உரிய கௌரவத்தைக் கொடுக்க வேண்டும். கௌரவம் என்பது**
1) அன்பு 2) அந்தஸ்து 3) வேலை 4) பாராட்டு


9. **கௌரவத்துடன் வாழ வேண்டும். கௌரவம் என்பதன எதிர்க்கருத்து**
1) அககௌரவம் 2) கௌரவமின்மை 3) அகௌரவம் 4) புகழுரை

10. **வீட்டுக்காரன் அவனைத் திட்டினான். – திட்டினான் என்பது**
1) பாராட்டினான் 2) அழைத்தான் 3) ஏசினான் 4) பேசினான்

# பொருத்தமான ஆகுபெயரினை இனங்கண்டு இணைக்குக.

| | |
|---|---|
| 1. வெள்ளை குரைத்தது | தொழிலாகு பெயர் |
| 2. கொய்யா இனிக்கிறது | சினையாகு பெயர் |
| 3. ஊர் அழுதது | குணவாகு பெயர் |
| 4. அவியல் உண்டான் | பொருளாகு பெயர் |
| 5. நாலு மணி பூத்தது | இடவாகு பெயர் |
| 6. தேயிலை நாட்டினான் | காலவாகு பெயர் |

**ஒரு பொருளுக்கு இயல்பாக உள்ள பெயர் அதனோடு தொடர்புடைய பிறிதொரு பொருளுக்கு தொன்று தொட்டு ஆகி வருதல் ஆகுபெயர் எனப்படும்.**


ஆகு பெயர்
தொழிலாகு பெயர்
பொருளாகு பெயர்
இடவாகு பெயர்
குணவாகு பெயர்
சினையாகு பெயர்
காலவாகு பெயர்

# ஒரு பொருள் குறித்த பல சொற்கள்

**பின்வரும் சொற் கூட்டங்களில் பொருத்தமற்ற சொல்லின் கீழ்க் கோடிடுக.**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | 1) கிரி | 2) பருவதம் | 3) குன்று | 4) பரி |
| 2. | 1) குருதி | 2) சோரி | 3) கரை | 4) கறை |
| 3. | 1) குழல் | 2) அளகம் | 3) பின்னல் | 4) கூந்தல் |
| 4. | 1) கருணை | 2) அடக்கம் | 3) தயவு | 4) கிருபை |
| 5. | 1) சரம் | 2) சுரம் | 3) காடு | 4) அடவி |
| 6. | 1) சக்தி | 2) வல்லமை | 3) உரம் | 4) உறம் |
| 7. | 1) ஒளி | 2) வெளிச்சம் | 3) பிரகாசம் | 4) ஒலி |

| | | | | |
|---|---|---|---|---|
| 8. | 1) இகழ்தல் | 2) போற்றுதல் | 3) பழித்தல் | 4) தூற்றுதல் |
| 9. | 1) சொல் | 2) பதம் | 3) கிளவி | 4) எழுத்து |
| 10. | 1) சாதல் | 2) நோதல் | 3) இறத்தல் | 4) மடிதல் |
| 11. | 1) சிங்கம் | 2) கேசரி | 3) மிருகம் | 4) மிருகேந்திரன் |
| 12. | 1) அருவி | 2) தடாகம் | 3) குளம் | 4) பொய்கை |
| 13. | 1) பெண் | 2) அவள் | 3) தையல் | 4) காரிகை |
| 14. | 1) வாசனை | 2) நெடி | 3) மனம் | 4) நாற்றம் |
| 15. | 1) சோலை | 2) பொழில் | 3) காடு | 4) பூங்கா |

# நன்றி